அதிலே தற்கொலை 43; எங்களுடைய ஆட்சிக் காலமான 2011 ஆம் ஆண்டிலிருந்து 2016 வரை இறந்தவர்களின் எண்ணிக்கை 399; அதிலே தற்கொலை செய்து கொண்டவர்கள் 39 பேர். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நோக்கி ஒரு வினாவை எழுப்புகின்றபோது, "நான் கேட்பது புரியவில்லையா அல்லது புரிந்துகொள்ள முடியவில்லையா" என்றார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை மாற்றியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) விடுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

பிற்பகல் 3–20

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 8–7–2017 அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். (குறுக்கீடு) அன்றைக்கே அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்துவிட்டோம். (குறுக்கீடு) ஆமாம்; அன்றைக்கே அலுவல் ஆய்வுக் குழுவில் பேசி முடிவு செய்துவிட்டோம். நீங்களும்தான் இருந்தீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்களும்தான் இருந்தீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ, நாளை

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2017 ஜூலை 7 (8–7–2017) சனிக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

நாளை (8–7–2017) வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8–7–2017) சனிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

–ஏதுமில்லை–

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

106. பொது நிறுவனங்கள் குழுவின் ஒன்றாவது அறிக்கை. (2016–2018)

107. பொது நிறுவனங்கள் குழுவின் இரண்டாவது அறிக்கை. (2016–2018)

108. பொது நிறுவனங்கள் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2016–2018)

109. பொது நிறுவனங்கள் குழுவின் நான்காவது அறிக்கை. (2016–2018)